# நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2022ம் ஆண்டு அன்று ஏப்ரல் மாதம் 28ந்தேதி (28.04.2022) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நகர் மன்ற கூடத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ள மன்றப்பொருள்களின் விபரம்

## நகர மன்ற தலைவர் கொண்டு வரும் சிறப்பு தீர்மானம்

**மன்றப்பொருள்–1)** நெல்லிக்குப்பம் நகராட்சி **01.10.1966**ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு பின்பு **09.05.1983**ல் இரண்டாம் நிலை நகரட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது தொடர்ந்து **30** ஆண்டு காலமாக இரண்டாம் நிலை நகராட்சியாகவே இருந்து வருகிறது. மேலும், இந்நகராட்சி **21.49** சது கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. மக்கள் தொகை **50000**–க்கு மேல் உள்ளது. அதற்கான அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவும் உரிய நிதியினை பெற்று நகர பகுதியினை செம்மமையாக மேம்படுத்தவும், நெல்லிக்குப்பம் நகராட்சியினை முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அனைத்து தகுதியும் உள்ளதால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மாவட்ட அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் பரிந்துரை செய்ய இந்நகர மன்றம் ஏக மனதாக தீர்மானித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**தீர்மான எண் 30 பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–2)** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் 7ல் அண்ணாநகர் 1வது தெருவில் நகர மன்ற தலைவர், நகர மன்ற உறுப்பினர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அப்பகுதியில் 4 சிறுபாலங்கள் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் பழுதடைந்துள்ளது. சுகாதார கேடு மற்றும் வாகன விபத்து ஏற்படும் நிலை உள்ளது. பொது மக்கள் நலன் கருதி சுகாதார கேடு ஏற்படாமல் தடுக்கும் வகையில் பழுதடைந்துள்ள சிறுபாலம் மற்றும் கழிவுநீர் கால்வாய் ஆகியவற்றை புதியதாக கட்ட நகர மன்ற தலைவர் கோரியதற்கிணங்க புதிய சிறு பாலம் **4** மற்றும் கழிவு நீர் கால்வாய் அமைக்க மதிப்பீடு **9.00** லட்சத்திற்கு பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1067/2022/இ1

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.31 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப் பொருள்–3)** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்–**20**ல் அண்ணா நகர் பிரதான சாலை பகுதிளை இன்று **(22.02.2022)** நகர மன்ற தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்கள் அது சமயம் மேற்படி பகுதிகளில் சிமெண்ட் சாலைகளில் உள்ள பழுதுகளை சரி செய்யுமாறும் உடைந்த சிமெண்ட சாலைகளை பேட்ச் ஒர்க் செய்யுமாறும் கூறியுள்ளார். மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி பணிக்கு மதிப்பீடு ரூ.**2.50** லட்சத்திற்கு பொது நிதியில் செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

1067/2022/இ1

**தீர்மான எண்.32 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–4)** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்.**20**ல் நகர மன்ற தலைவர் இன்று **(22.04.2022)** ஆய்வு மேற்கொண்டார். அது சமயம் அண்ணா நகர் பிரதான சாலை பகுதிகளில் உள்ள சிறுபாலங்கள் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் பழுதடைந்து பொதுமக்கள் நடக்க வழியில்லாமல் சுகாதரகேடு ஏற்படும் நிலையும் உள்ளது. இதனை பார்வையிட்ட நகர மன்ற தலைவர் அவர்கள் உடனடியாக பழுதடைந்த சிறுபாலம் மற்றும் கழிவுநீர் கால்களை புதிதாக

கட்டுமாறு கூறியுள்ளார். எனவே, பொதுமக்கள் நலன் கருதியும் சுகாதார கேடு ஏற்படாமல் இருக்கும் வகையில் பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பீடு **9.50** தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

1067/2022/இ1

**தீர்மான எண்.33 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–5 )** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்.7ல் உள்ள அண்ணா நகர் பகுதிகளில் உள்ள சிமெண்ட் சாலைகள் குறுக்கே குடிநீர் குழாய் பதிப்பதற்காக சாலைகள் உடைக்கப்பட்டுள்ளது. இதனால் சாலைகளின் பெரும் பகுதி மோசமான பள்ளமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் சாலைகளில் செல்ல வழியில்லாமல் உள்ளது. மேலும், மழைக்காலங்களில் பள்ளங்களில் மழைநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. இன்று **(22.04.2022)** நகர மன்ற தலைவர் நகர மன்ற உறுப்பினர்கள் அப்பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். உடனடியாக பழுதடைந்துள்ள சாலைகளை பேட்ச் ஒர்க் செய்யுமாறு நகர மன்ற தலைவர் கூறினார். இதற்கு மதிப்பீடு ரூ.**2.50** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

1067/2022/இ1

**தீர்மான எண்.34 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–6)** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்.**25** மற்றும் **26**ல் உள்ள பகுதி மக்களுக்கு கருமகாரிய கொட்டகை இல்லாத காரணத்தினால் இறந்தவர்களுக்கு கருமகாரியம் திறந்த வெளியில் குப்பை மேட்டில் செய்து வருகிறார்கள். எனவே, பொதுமக்கள் நலன் கருதி புதியதாக கருமகாரியம் கொட்டகை அமைத்து தருமாறு அப்பகுதி நகர மன்ற உறுப்பினர் கூறினார். மேற்படி இடத்தினை இன்று **(06.04.2022)** நகர மன்ற தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ளும் போது புதிய கரும காரிய கொட்டகை அமைத்து தருமாறு கூறியுள்ளார்கள். எனவே, பொதுமக்கள் நலன் கருதியும் கருமகாரிய கொட்டகை அமைக்க மதிப்பீடு ரூ.**9.00** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

1067/2022/இ1

**தீர்மான எண்.35 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–7)** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்.**9**ல் உள்ள ராமு தெருவில் உள்ள இரண்டு சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்கள் பழுதடைந்துள்ளது. அப்பகுதி மக்கள் செல்வதற்கு வழியில்லாமல் உள்ளள. மேலும் பள்ளி செல்லும் மாணவர்கள் பள்ளிக்கு செல்ல முடியாமல் உள்ளது. மேற்படி இடத்தை நகர மன்ற தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர் இன்று **( 06.04.2022)** ஆய்வு மேற்கொண்டதில் பழுதடைந்த இரண்டு சிறு பாலத்தையும், மழைநீர் வடிகாலையும் இடித்து அகற்றிவிட்டு புதிதாக சிறுபாலம் மழைநீர் வடிகால் கட்டுமாறு கூறினார். இதற்கு மதிப்பீடு ரூ.**6.00** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

1067/2022/இ1

**தீர்மான எண்.36 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–8)</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10ல் ரத்தினம்பிள்ளை தெருவில் உள்ள பெரிய கல்வெட் ஒன்று பழுதடைந்துள்ளது. அப்பகுதியில் பொதுமக்கள் செல்ல வழியில்லாமல் உள்ளது. மேற்படி இடத்தை நகர மன்ற தலைவர் ஆய்வு செய்து உடனடியாக பழுதடைந்த பாலத்தை சீர்செய்யுமாறு கூறியுள்ளார். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் போக்குவரத்து இடையுறு இல்லாமல் பழுதடைந்த பாலத்தை அகற்றிவிட்டு புதிய காலம் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதயிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

<u>1067/2022/இ1</u>

**தீர்மான எண்.37 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–9)</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் 4ல் உள்ள வான்பாக்கம் வள்ளுவர் தெருவில் தார்சாலை பழுதடைந்து பொது மக்கள் நடந்து செல்ல வழியில்லாமல் உள்ளது. எனவே, அப்பகுதியில் புதிதாக சாலை அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, பொதுமக்களின் நலன் கருதி பழுதடைந்துள்ள தார்சாலையை அகற்றி புதிதாக பேவர் பிளாக் சாலை போடுவதற்கு மதிப்பீடு ரூ.9.50 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செய்து கொடுக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

<u>1067/2022/இ1</u>

**தீர்மான எண்.38 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–10)</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்.29ல் உள்ள மாருதி நகரில் உள்ள பொதுமக்களுக்கு மாருதி நகர் மேல்நிலை தண்ணீர் தொட்டியில் இருந்து தண்ணீர் சப்ளை தினசரி காலை மாலை இரண்டு வேலைகள் வழுங்கபட்டு வருகிறது. தற்சமயம் மேற்படி மேல் நிலை நீர் தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறுடன் மோட்டார் பம்பு மூலம் தண்ணீர் தொட்டியில் நிரப்பப்பட்டு தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. தற்சமயம் அங்குள்ள ஆழ்குழாய் கிணறு பழுதடைந்துள்ளது இதனால் குடிநீர் சப்ளை பாதிப்படைந்துள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதியும் குடிநீர் அவசரம் அவசியம் கருதியும் மேற்படி பகுதியில் புதிய ஆழ்குழாய் அமைக்க ரூ. 9.95 லட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிருந்து நிதியிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

<u>1067/2022/இ1</u>

**தீர்மான எண்.39 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–11)</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வான்பாக்கம் சாலையில் உள்ள செல்லியம்மன் கோயில் புறாக்குளக்கரையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கரும காரிய மண்டபம் கட்டிக்கொடுக்குமாறு அப்பகுதி நகர் மன்ற உறுப்பினர்கள் (வார்டு எண்–3,5,8,9,10,11 மற்றும் 17) கூயியுள்ளார்கள். எனவே, மேற்படி பகுதி மக்களின் நலன் கருதி அப்பகுதியில் நகராட்சி இடத்தில் புதியதாக கரும காரிய கட்டிடம் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.9.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

<u>1067/2022/இ1</u>

**தீர்மான எண்.40 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–12)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 4ல் உள்ள வான்பாக்கம் வள்ளுவர் சாலை இணைப்பு சாலை மண் சாலையாக இருப்பதனால் பொது மக்கள் அப்பாதையை உபயோக படுத்த முடியாத நிலை உள்ளது. மேலும் இறந்தவர்களின் உடலை அந்த சாலை வழியாக எடுத்துச்செல்ல இயலாமல் உள்ளது. எனவே, அப்பகுதியில் சாலை அமைத்து தருமாறு அப்பகுதி நகர் மன்ற உறுப்பினர் கூறினார். எனவே பொது மக்களின் நலன் கருதி அப்பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்க மதிப்பீடு ரூ.7.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

1067/2022/இ1

**தீர்மான எண்.41 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–13)** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் வருவாய் நிதியில் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை சந்திப்புகளிலும் பொது மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதிகளில் உள்ள பழைய தெரு விளக்குகளை மாற்றி புதிதாக 150 W LED வாங்கி பொருத்துவதற்கு 22.04.2022அன்று ரூ.9.75 லட்சத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மின் உபகரணங்கள் மற்றும் மின் விளக்குகள் சப்ளை செய்யும் தொகை ரூ. |
|---|---|
| East Coast Trading Company.<br>79,Big Street, Kottakuppam,<br>Vanur T.KÏ Villupuram-605 104 | ரூ.17349/–<br>0.01% குறைவு |
| Vedha Sri Medicals & Agencies,<br>38,1-1. KSAR Road,<br>Nellikuppam- 607 105.<br>Cuddalore Dt. | ரூ.17450/–<br>0.58% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள East Coast Trading Company அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.847.2022/இ1

**தீர்மான எண்.42 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–14)** நெல்லிக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17 நிதியின் கீழ் ரூ.74.00 லட்சம் மதிப்பீட்டில் ஆரோக்கியசாமி தெரு உரக்கிடங்கில் (Compost Yard) பல ஆண்டு காலமாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்து உயர் சுரங்க (BIO MINING) முறை மூலம் அகற்றி நிலத்தை மறு சீரமைக்கும் பணிக்கு 27.05.2019 அன்று **M/s. அருணை கம்பியூட்டர்ஸ்** பாம்ஸ், ஒப்பந்ததாரர், 646, வள்ளலார் நகர், டீச்சர் நகர் (போஸ்ட்)) திருப்பத்துார், வேலுார்–4, என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. பணி உத்தரவு வழங்கப்பட்டு 12 மாதங்ககக்குள் பணியினை முழுமையாக செய்து முடித்திட வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் பணி ஆணை வழங்கி 35 மாதங்கள் கடந்த பின்னும் இதுநாள் வரை பணியினை முடிக்கவில்லை. 14 முறை விரைவில் இப்பணியினை முடித்திட வேண்டும் என அறிவிப்பு கடிதம் அனுப்பியும் பணியினை முடிப்பதற்கான எந்த முகாந்திரமும் மேற்படி நிறுவனத்திடம் இல்லை. அலைபேசியையும் தொடர்பு கொண்டால் அதனையும்

எடுப்பதில்லை. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதுடன் பொதுமக்களும் பாதிப்பு அடைகின்றனர். எனவே மேற்படி நிறுவனம் செய்த வேலைக்கு மட்டும் தொகை வழங்கிடவும், மீதம் உள்ள பணிக்கான தொகைக்கு மறு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு ஏதுவாக **M/s. அருணை கம்பியூட்டர்ஸ்** பாம்ஸ், ஒப்பந்ததாரர், 646, வள்ளலார் நகர், டீச்சர் நகர் (போஸ்ட்))திருப்பத்தூர், வேலூர்–4, என்ற நிறுவனத்தின் பணி உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2) மேற்படி பணி அரசு திட்டப்பணி என்பதால் உடனடியாக பணி முடித்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டி உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17 நிதியின் கீழ் ரூ.74.00 லட்சம் மதிப்பீட்டில் ஆரோக்கியசாமி தெரு உரக்கிடங்கில் (Compost Yard) பல ஆண்டு காலமாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்து உயர் சுரங்க (BIO MINING) முறை மூலம் அகற்றி நிலத்தை மறு சீரமைக்கும் பணிக்கு **M/s. அருணை கம்பியூட்டர்ஸ் , வேலூர் –4** பணி உத்தரவு வழங்கி மேற்படி நிறுவனம் மேற்கொண்ட பணிக்கு மட்டும் உரிய தொகை போக மீதம் உள்ள தொகைக்கு (மீதி இருப்பு தொகையினை கண்டறிய திடக்கழிவினை கணக்கீடு செய்ய இயக்குநர் சுற்று புற சூழல் பொறியியல், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25 கடிதம் அனுப்பப்பட்டுள்ளது) மறு ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல் குறிப்பு : – 1) பணி உத்தரவு ரத்து செய்ததை அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

<u>கோப்பு எண்.2023/2016/இ1</u>
**தீர்மான எண்.43 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–15)** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு 2021–2022ம் ஆண்டிற்கான சொத்துவரி, காலிமனை வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் நகராட்சியின் கடை வாடகை கட்டணம் ஆகியவற்றின் நிலுவை/ நடப்பு கேட்பு தொகைகளை நகராட்சி. செங்கற்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் அறிவுரையின் படி பொதுமக்கள் நகராட்சியின் கணினி வரி வசூல் மையத்தில் 31.03.2022ம் தேதி முடிய உள்ள காலங்களுக்கு செலுத்தக்கோரி இந்நகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனத்தில் மூலம் விளம்பரசெய்யும்போது குப்பை எடுக்கும் இடத்திற்கு மட்டுமே வாகனம் செல்கிறது இதனால் பொது மக்களுக்கு தகவல் அறியமுடியவில்லை. தனியர் ஆட்டே விளம்பரம் 30 வார்டு பொதுமக்கள் அறியும் வண்ணம் தனியார் வாகனத்தில் விளம்பரம் செய்ய அதற்கு தேவையான ஆட்டோ மைக்கெட், ஆம்பிளிபியர், ஸ்பீக்கர், பேட்டரி ஆகியவற்றை கீழ் கானும் விபரப்படி வரபெற்ற உள்ளுர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைபுள்ளி

| | | |
|---|---|---|
| 1 | ராஜாசவுண்டு சார்வீஸ் நெல்லிக்குப்பம் | ரூ,2800 (1 நாளுக்கு) |
| 2 | ஸ்ரீதர்சவுண்டு சார்வீஸ் நெல்லிக்குப்பம் | ரூ,3000 (1 நாளுக்கு) |

அலுவலக குறிப்பு : 1) வரப்பெற்ற உள்ளுர் விலைபுள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகளில் ராஜாசவுண்டு சார்வீஸ் நெல்லிக்குப்பம் வழங்கலாம் மன்றம் அனுமதிக்கலாம்.

2)வரிவசூல் பணியின் அவசர அவசியம் கருதியும் மன்ற அனுமதியை எதிர்நோக்கியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண் . 693/2022/A1)**
**தீர்மான எண்.44 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–16)</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் புதியதாக பொறுப்பேற்றுள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்களின் வார்டு பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறாகவும், பாதிப்பு ஏற்படும் வகையில் உள்ள முட்புதர்கள் அகற்றம் செய்யவும், நீண்ட நாட்களாக குவிந்து கிடக்கும் மண்மேடுகள் அகற்றிடவும், இடுகாடுகளில் வளர்ந்து உள்ள செடி, கொடிகள் அகற்றி சுத்தம் செய்திடவும், போக்குவரத்திற்கு இடையூறாக சாலை ஓரங்களில் வளர்ந்துள்ள முட்செடிகளை அகற்றிடவும் மற்றும் மைதானங்களை சமப்படுத்தி வழங்கிடவும் கோரி நகர்மன்ற தலைவர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் மனுக்கள் வழங்கியதன் காரணமாக, அதனை தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டி நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் அவர்களுடன் நேரில் சென்று தல ஆய்வு மேற்கொண்டதில், இப்பணிகள் யாவும் JCB எந்திரம் மேற்கொள்ள இயலும் என்பதினால், JCB வாகனம் வாடகை அடிப்படையில் எடுத்து மேற்கண்ட பணிகளை சம்மந்தப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் மேற்கொண்டிட ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1179/2022/எச்1**

**தீர்மான எண்.45 அனுமதிக்கப்பட்டது**

<u>மன்றப்பொருள்–17)</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள சமுதாய கழிவறைகளில் உள்ள நச்சுத் தொட்டிகளில் கழிவுநீர் நிரம்பி விட்டதால், கழிவறைகளை பயன்படுத்த சிரமமாக உள்ளது என சம்மந்தப்பட்ட வார்டு நகர் மன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் புகார் தெரிவித்து வருவதினாலும், நகராட்சி திறந்த வெளி கழிப்பிடமற்ற நகராட்சி என சான்று பெற வேண்டி உள்ளதினாலும், 21 சமுதாய கழிவறைகளில் உள்ள நச்சு தொட்டிகளை தனியார் வாகனம் மூலம் சுத்தம் செய்யவும், மேலும், கழிவறைகளில் அடைப்புகள் உள்ளது என தெரிய வருவதினால், தனியார் வாகனம் மூலம் அடைப்புகள் அகற்றவும், சமுதாய கழிவறைகள் தவிர்த்து நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள நச்சு தொட்டியும் நிரம்பி விட்டபடியால் அதனை சுத்தம் செய்யவும், கழிவறைகளில் உள்ள அடைப்புகள் அகற்றவும் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், நச்சு தொட்டிகளை சுத்தம் செய்யவும், கழிவறைகளில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றவும், தனியார் வாகனங்களை வாடகை அடிப்படையில் பயன்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.1177/2022/எச்1</u>

**தீர்மான எண்.46 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–18)</u>** செங்கற்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் 07.04.2022அன்று காணொளி காட்சி மூலமாக தூய்மை இந்தியா திட்ட பணிகள் குறித்தான ஆய்வுக்கூட்டம் மேற்கொண்டதில், நகராட்சி பகுதியில் புதியதாக வரையறுக்கப்பட்ட 30 வார்டுகளின் எல்லைகளை நிலவியல் தகவல் அமைப்பு (Geographic Information System- GIS) வரைபடத்தில் குறியீடு செய்து, தூய்மை இந்தியா இயக்கம் சம்மந்தமான வசதிகளை வரைபடத்தில் குறிப்பிடும்படியும் அறிவுறுத்தியதின் காரணமாக நகராட்சியில் GIS வரைபடம் மற்றும் அதனை குறியீடு செய்துடும் வயில் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், தனியார் நிறுவனமான பங்கஜம் பிளானர்ஸ், 4 & 5 சஞ்சீவிராயன் கோயில் தெரு, புதுப்பாளையம், கடலூரில் இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் வார்டு ஒன்று ரூ.500/– வீதம் 30 வார்டுகளுக்கு ரூ.15,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி/SUC நிதியிலிருந்து
‘ மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.633/2022/எச்1

**தீர்மான எண்.47 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–19)** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்படும் டாட்டா ஏசி வாகனங்கள் மொத்தம் மூன்றில் TN31AH6642 மற்றும் TN31AH6556 ஆகிய இரண்டு வாகனங்களும் தகுதிசான்று முடிவடைந்து, தற்சமயம் அதற்கான பணிகள் மேற்கொள்ள பணிமனைக்கு அனுப்பி வைத்திட வேண்டி உள்ளது. இச்சமயத்தில் பணிகள் எதுவும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஈடு செய்திடும் வகையில் வாகனம் தேவைப்படுவதினாலும், தற்சமயம் புதியதாக பொறுப்பேற்ற நகர்மன்ற தலைவர், துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்கள் வார்டு பகுதிகளை துப்புரவு பணியினை மேம்படுத்த வேண்டியும், வார்டு பகுதிகளில் உள்ள கால்வாய்களில் உள்ள மண்ணை தூர் வாரி அதனை அவ்வப்போது அகற்றப்பட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்து வருவதினால், இரண்டு வாகனங்களும் தகுதிசான்று பெற்று பணிக்கு பயன்படுத்தும் நிலை வரும் வரை நெல்லிக்குப்பம் அக்ரோ நிறுவனம் மூலம் ஒரு டிப்பர் டிராக்டர் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.3000/– என்கின்ற அடிப்படையில் எடுத்து பணி மேற்கொள்ளவும் 01.05.2022 முதல் 30.06.2022 முடிய இரண்டு மாதங்களுக்கு வாடகைக்கான உத்தேச செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி /**SWM**/SUC நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ம‹w« அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1135/2022/எச்1

**தீர்மான எண்.48 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–20** கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் அ3/3432/2020, நாள் 01.04.2022ல் கடலூர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரப்பக்கூடிய கொசுக்களின் பெருக்கம் அதிகம் இருப்பதின் காரணமாக டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா தொற்று பரவி வருவதினால், கடலூர் மாவட்டத்திலுள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் டெங்கு கொசு நோய் தடுப்பு பணியாளர்களின் பணிக்காலத்தினை ஏப்ரல் 2022 முதல் ஜூன் 2022 முடிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு வழங்கி உள்ள காரணத்தினாலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் அவசரக் குறிப்பாணையில் தற்காலிக கொசு தடுப்பு பணியாளர்களை ஏப்ரல் 2022 முதல் ஜூன் 2022 முடிய தொடர்ந்து பேரூராட்சி பகுதிகளில் பணி மேற்கொள்ள தெரிவித்து உள்ளதினாலும், நகராட்சி பகுதிகளில் DBC பணியாளர்களின் பணியினை 31.12.2021 தேதியுடன் நிறுத்தப்பட்டு, பொங்கல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான நன்னடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் மன்றத்தின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள முடியவில்லை. தற்சமயம் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகம் பரவுகின்ற காரணத்தினால், ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் DBC பணியாளர்களை தொடர்ந்து பணி மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களும் தெரிவித்துள்ளமையால் நகராட்சி பகுதிகளில் தொற்று நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 300 குடியிருப்புகளுக்கு ஒரு DBC (Domestic Breeding Checkers) பணியாளர் வீதம் 12000 குடியிருப்புகளுக்கு 40 பணியாளர்களை 11.04.2022 முதல் 30.06.2022 முடிய மூன்று மாதங்களுக்கு விவேகானந்தர் மகளிர் சுய உதவிக்குழு நியமனம் செய்து பணி மேற்கொள்ளவும், இதற்கான செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2021–ம் ஆண்டில் பணியாளர் ஒருவருக்கு ரூ.200/– என்கின்ற தினக்கூலி அடிப்படையில் 40 பணியாளர்களை விவேகானந்தர் மகளிர் சுய உதவிக்குழு மூலம் நியமித்து பணி மேற்கொண்டது போல 11.04.2022 முதல் 30.06.2022 முடிய மூன்று மாதங்களுக்கு மேற்கண்ட தினக்கூலி அடிப்படையில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

4. இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி / SUC நிதியிலிருந்து வழங்கிடவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1065/2022/எச்1)**

**தீர்மான எண்.49 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–21</u>** நகராட்சி பகுதியில் அமைந்துள்ளஅரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மை செய்து பராமரிப்பு செய்து வரும் பணியாளர்களுக்கு பிப்ரவரி 2022 மாதம் முதல் ஊதியம் வழங்கப்படாமல் நிலுவை உள்ளதினால், அவர்களுக்கு ஊதியம் வழங்கிட ஆவண செய்யுமாறு பள்ளி தலைமை ஆசிரியர்கள் கடிதம் வழங்கியுள்ளதினாலும், கோவிட்–19 தொற்றின் பரவல் குறைந்து வருவதின் காரணமாக பள்ளிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதினால் பிப்ரவரி 2022 மாதம் முதல் 11 அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் பராமரிப்பு செய்து வரும் பணியாளர்களுக்கு பிப்ரவரி 2022 முதல் மே 2022 முதல் நான்கு மாதங்களுக்கு பணியாளர் ஒருவருக்கு மாத ஊதியம் ரூ.5000/– வீதம் விவேகானந்தர் மகளிர் சுய உதவிக்குழு மூலம் 11 தூய்மை பணியாளர்கள் நியமித்து பணி செய்து வருவதற்கு அனுமதியும், அதற்கான செலவினம் ரூ.2.20 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பிப்ரவரி 2022 மாதம் முதல் விவேகானந்தர் மகளிர் சுய உதவிக்குழு மூலம் 11 பள்ளிகளில் 11 பணியாளர்கள் தொடர்ந்து பணி செய்து வருவதினை மன்றம் அங்கீகரித்து ஊதியம் வழங்கிட அனுமதிக்கலாம்.

3. இச்செலவினத்தினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்கிட அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 2654/2021/எச்1)**

**தீர்மான எண். 50 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–22</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு 1ல் உள்ள விஸ்வநாதபுரம் சந்து தெருவில் சாலை அமைத்து 35 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. மேற்படி சாலை பழுதடைந்துள்ளது. பொது மக்கள் நடந்து செல்ல வழியில்லாமல் உள்ளது. மேற்படி சாலையை நகர மன்ற தலைவர் ஆய்வு செய்து மேற்படி இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைக்குமாறு கூறியுள்ளார். எனவே, பொது மக்கள் நலன் கருதி மேற்படி பழுதடைந்த சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்றுவதற்கு மதிப்பீடு ரூ.9.50 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி பொது நிதியில் செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல் குறிப்பு : – அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண்.1067</u>

**தீர்மான எண்.51 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–23</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் 1ல் உள்ள விஸ்வநாதபுரம் 2வது சந்து தெருவில் சாலை அமைத்து சுமார் 35 ஆண்டுகள் ஆகிறது. தற்சமயம் மழை காலங்களில் மேற்படி சாலையில் தண்ணீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளது. மேற்படி இடத்தை நகர் மன்ற தலைவர் ஆய்வு செய்தார். அது சமயம் பொது மக்கள் நலன் கருதி மேற்படி சாலையை பேவர் பிளாக் சாலையாக போடும்படி கூறியுள்ளார். எனவே, பொது மக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில்

பேவர் பிளாக் சாலை அமைக்க மதிப்பீடு. ரூ.5.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி பொது நிதியில் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவல் குறிப்பு : – அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.1067/2022/இ1
**தீர்மான எண்.52 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-24** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.163.00 (Un Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 22.04.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Converstion of Existing damaged CC Road to Paver block road at Saravanapuram To Kakkan Street (094026R354) | 9.80 | திருமதி. தனலட்சுமி, ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | 0.01% சதவிகிதம் குறைவு |
| | | | திருமதி.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 0.58% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.01 % குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி.தனலட்சுமி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
கோப்பு எண்.3739/2021/இ1
**தீர்மான எண்.53 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-25** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.163.00 (Un Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 22.04.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Converstion of Existing damaged | 11.20 | M/s. Arunachala Associate, ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | 4.99% சதவிகிதம் அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | CC Road To Paver block Road at Arunthathiyar Street (094028R375) | | திருவி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூார் | **16.58**% சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் **4.99** % அதிகத்தில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/s. Arunachala Associate, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
**2)** கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
<u>கோப்பு எண்.**3739/2021**/இ1</u>
**தீர்மான எண்.54 அனுமதிக்கப்பட்டது**

**<u>k‹w¥bghUŸ-26</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் **15**வது நிதிக்குழு மான்யம் **2020–21** ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் **21191/2021** அம்ரூட்–**2** நாள் : **13.11.2021**ன்படி ரூ.**163.00** (Un Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி **22.04.2022** அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Converstion of Earthen road to Paver block road at **Annamalai nagar** (094028R375) | **8.40** | திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | **0.03**% சதவிகிதம் குறைவு |
| | | | திரு.எம்.செந்தாமரைக்கண்ணன், ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 3.21% சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் **0.03** % குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
<u>கோப்பு எண்.**3739/2021**/இ1</u>
**தீர்மான எண்.55 அனுமதிக்கப்பட்டது**

**<u>k‹w¥bghUŸ-27</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் **15**வது நிதிக்குழு மான்யம் **2020–21** ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் **21191/2021** அம்ரூட்–**2** நாள் : **13.11.2021**ன்படி ரூ.**163.00** (Un Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி **22.04.2022** அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|

| | | (ரூ.இலட் சத்தில்) | | |
|---|---|---|---|---|
| 1 | Converstion of Existing damaged CC road to Paver Block road at Sivashamugam Nagar (094025R212) | 8.40 | திரு.என்.சந்திரசேகர், ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 0.37% சதவிகிதம் அதிகம் |
| | | | திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 3.35% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.37% அதிகத்தில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.என்.சந்திரசேகர், ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) கூடுதல் செலவினத்தி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.3739/2021/இ1
**தீர்மான எண்.56 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-28** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.163.00 (Un Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 22.04.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Conversion of Existing BT Road to Paver Block road at Mullikirampattu ambedkar Street | 11.20 | திரு.எம்.செந்தாமரைகண்ணன், ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 0.42 சதவிகிதம் அதிகம் |
| | | | திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 3.31% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.42% அதிகத்தில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.எம்.செந்தாமரைக்கண்ணன், ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) கூடுதல் செலவினத்தி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.3739/2021/இ1
**தீர்மான எண்.57 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-29** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.100.00 (Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 22.04.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | **Supply and delivery of Sumersible pumpset at various places in Municipal limit** | **9.00** | திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | **4.99** சதவிகிதம் அதிகம் |
| | | | திரு.என்.சந்திரசேகர், ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 6.27% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் 4.99 % சதவிகிதம் அதிகத்தில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி. எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) கூடுதல் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண்.58 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-30** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.100.00 (Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 22.04.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | **Construction of compound wall at Mulligirampattu OHT complex permisses** | 4.40 | திருமதி.கே.லட்சுமி ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் | **0.03** சதவிகிதம் குறைவு |
| | | | திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 1.70% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் 0.03% சதவிகிதம் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி. கே.லட்சுமி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
கோப்பு எண்.3739/2021/இ1
**தீர்மான எண்.59 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-31** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.163.00 (Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 22.04.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ<br>எ<br>ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு த் தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Construction of compound wall at Maruthi Nagar OHT complex permisses | 9.00 | திருமதி. தனலட்சுமி, ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | 0.02% சதவிகிதம் குறைவு |
| | | | திருமதி.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 1.79% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.02 % குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி.த13னலட்சுமி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
கே ாப்பு எண்.3739/2021/இ1
**தீர்மான எண்.60 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-32** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.163.00 (Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 22.04.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ<br>எ<br>ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு த் தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Providing paver block arrangements in municipal office compous front side | 9.00 | திருமதி. தனலட்சுமி, ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்ப ம் | 0.01% சதவிகிதம் குறைவு |
| | | | திருமதி.பரிமளா, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 1.23% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.02 % குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி. தனலட்சுமி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
ே காப்பு எண்.3739/2021/இ1
**தீர்மான எண்.61 அனுமதிக்கப்பட்டது**

**k‹w¥bghUŸ-33** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.100.00 (Tied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் Baling Machine ரூ.3.60 இலட்சத்திற்கு வாங்க ஒப்பந்தபுள்ளி 22.04.2022 கோரியதில் மூன்று நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றுள்ளது.

1) Soham Impex, Vavpi. Surveyud.28, Plot No.7, Near sunny RajMettop, Rajkot-4. Kujarat, India
2) Sri Sai Industry, N.T.382, Sidco Industrial Estate, Kattur, , Thirumullai vayal, Chennai
3) Health Care Technology, No/156/42, Main Road, Avainagar, Thiruvanmiyur, Chennai

என மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தபுள்ளி படிவங்கள் சமர்பித்து உள்ளார்கள். அவை அனைத்தும் சரியாக உள்ளது. இருப்பினும் ஒரு நிறுவனம் குஜராத்திலிருந்தும் இரண்டு றிறுவனங்கள் சென்னைலிருந்து படிவங்கள் சமர்பித்து உள்ளனர். வரிசை எண் 1ல் காணும் நிறுவனம் விலைப்புள்ளி வழங்கப்படவில்லை. மற்ற இரண்டு நிறுவனங்கள் மதிப்பை விட கூடுதலாக விலைப்புள்ளி அளித்துள்ளனர். எனவே, நிர்வாக நலன் கருதி மேற்படி ஒப்பந்தபுள்ளியினை ரத்து செய்து மறு ஒப்பந்தபுள்ளி கோரலாம் என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>கோப்பு எண்.3739/2021/இ1</u>

**தீர்மான எண்.62 அனுமதிக்கப்பட்டது**

**<u>k‹w¥bghUŸ-34</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2021–22ம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.68.00 (UnTied grant) லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.34/– லட்சத்திற்கு SL நகரில் பூங்கா அமைக்க ஒப்பந்தபுள்ளி 22.04.2022 கோரியதில் கலந்து கொண்ட இரண்டு நபர்களும் தொழிற்நுட்ப படிவம் (Technical bid) இணைத்து ஒப்பந்தபுள்ளி கோரவில்லை. எனவே, இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு மறு ஒப்பந்தபுள்ளி கோரலாம் என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>கோப்பு எண்.3739/2021/இ1</u>

**தீர்மான எண்.63 அனுமதிக்கப்பட்டது**

**<u>k‹w¥bghUŸ-35</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். இதன் மொத்த பரப்பளவு 24.50 சதுர கி.மீ.ஆகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 46678–வும், தற்போதைய மக்கள் தொகை 48578வும் இந்நகரின் குடியிருப்புகள் 10752 என கண்டறியப்பட்டது. இந்நகராட்சியில் 412 தெருக்கள் மற்றுமி 85.5 கி.மீ.நீளமுள்ள சாலைகள் பராமரிப்பில் உள்ளன. தற்போது நடைபெற்ற நகர்ப்புற தேர்தலில் வெற்றி பெற்று நகர்மன்ற தலைவராக பதவி ஏற்ற நகர்மன்ற தலைவர் மக்கள் குறை தீர்க்க நகர்வலம் செல்வதற்கு அவரது பயன்பாட்டிற்கு புதிதாக MAHINDRA BOLERO B6 (O) BS-VI AC வாகனம் அரசின் GEM விலைப்பட்டியலின் அடிப்படையில் வாங்கிக்கொள்ளவும், மேற்படி செலவினத்தினை நகராட்சி பொது நிதிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு. மேலும், நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டதை மன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது.

அலுவல் குறிப்பு : 1) அனுமதிக்கலாம்.
2) நகர மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைத்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.1067/2022/இ1

**தீர்மான எண்.64 அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர்
நெல்லிக்குப்பம் நகராட்சி